**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்**
**முன்னிலை: திருமதி.G.தங்க கார்த்திகா, B.Sc., B.L.,**
**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.), முதுகுளத்தூர்.**
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ஆம் நாள் வியாழக்கிழமை**
**சுருக்குப்பட்டிகை வழக்கு எண்.42/2026**
**CNR.No. TNRM08-000144-2026**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | முதுகுளத்தூர் காவல்நிலையம்<br>குற்ற எண் - 390/2021 |
| எதிரிகளின் விபரம் | | |
| 2. | பெயர்,<br>த/பெ.<br>முகவரி | 1) அஜித்,<br>த/பெ.வெற்றிவேல்,<br>காமராஜர் நகர்,<br>முதுகுளத்தூர் தாலுகா.<br><br>2) வினோபாலா,<br>த/பெ.தர்மர்,<br>தெற்கு காக்கூர்,<br>முதுகுளத்தூர் தாலுகா.<br><br>3) சதீஷ்குமார்,<br>த/பெ.பூமிநாதன்,<br>குமாரக்குறிச்சி. |
| 3. | சம்பவ நாள் | 11.11.2021 ம் தேதி 14.00 மணி |
| 4. | புகார் தேதி | 11.11.2021 ம் தேதி 16.00 மணி |
| 5. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | A2 – 13.11.2021 (Station Bail)<br>A1 & A3 – Absconding |
| 6. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A2 – 13.11.2021 (Station Bail)<br>A1 & A3 – Absconding |
| 7. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 8. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 17.03.2026 |
| 9. | விசாரணை முடிவுற்ற நாள் | 02.04.2026 |
| 10. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | இதச பிரிவுகள் 294(b) மற்றும் 323ன் கீழ் |


THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.04.02 17:05:58 +0530

<table>
<tr><td>11.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை</td></tr>
<tr><td>12.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>17.03.2026</td><td>17.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>17.03.2026</td><td>17.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>13.</td><td>எதிரிகளிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>02.04.2026</td></tr>
<tr><td>14.</td><td>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>15.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 359(ii) BNSS ன் படியான மனுக்கள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>16.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 348 BNSS ன் படியான மனுக்கள்</td><td>U/s.348 BNSS Petition filed and allowed in MP. No.01/2026, dated: 26.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. S. சொக்கேசன்</td></tr>
<tr><td rowspan="2">18.</td><td>1 மற்றும் 2ம் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. M. ரமேஷ்</td></tr>
<tr><td>3ம் எதிரி தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. C.ராஜேஷ் கண்ணா</td></tr>
<tr><td>19.</td><td>எதிரிகளின் கூற்று</td><td>எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள்.</td></tr>
<tr><td>20.</td><td>தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள்</td><td>02.04.2026</td></tr>
<tr><td>21.</td><td>வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>02.04.2026</td></tr>
</table>



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.04.02 17:06:08 +0530

| | | |
|---|---|---|
| 22. | நீதிபதியின் முடிவு | முடிவாக, இதச பிரிவுகள் 294(b) மற்றும் 323ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை BNSS பிரிவு 278(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார்கள். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு கடந்த 06.02.2026ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 02.04.2026ம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2ம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. ரமேஷ். B.A., B.L.., மற்றும் 3ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. C.ராஜேஷ் கண்ணா, B.E., LLB., அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

1) இவ்வழக்கின் புகார்தாரரும், எதிரிகளும் முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிப்பவர்கள் ஆவார்கள். இந்நிலையில் கடந்த 11.11.2021ம் தேதி மதியம் 02.00 மணியளவில் இவ்வழக்கின் புகார்தாரரான மதிவின் என்பவரிடம் எதிரிகள் வருட முடிவில் விழா நடத்துவதற்கு பணம் கேட்டுள்ளதாகவும், அதற்கு புகார்தாரர் தருகிறேன் என்று கூறியதாகவும், பின்பு எதிரிகள் மது அருந்துவதற்கு பணம் கேட்கின்றார்கள் என்று புகார்தாரர்


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.04.02 17:06:12 +0530

யாரிடமோ சொல்லியதாக நினைத்து புகார்தாரரை பார்த்து ஏன்டா குடிக்க காசு கேட்டோம்னு சொன்னியாம்லடா தாயோழி என்று அசிங்கமாக பேசி கன்னத்தில் மாறி மாறி அடித்து கீழே தள்ளி மிதித்ததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b) மற்றும் 323 ன் கீழ் முதுகுளத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b) மற்றும் 323 ன் கீழான குற்றத்தின் தன்மை குறித்து எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு குற்றவாளிகள் இல்லை என்று அவர்கள் மீதான குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து பிரிவு 351(1)(ஆ)BNSS–ன்படி கேள்விகள் கேட்க எதிரிகள் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன்பேரில் எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

<u>**5) தீர்வுக்குரிய பிரச்சனை :–**</u>

i. எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b) மற்றும் 323 ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிகளுக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.



THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.04.02 17:06:16 +0530

iii. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6) அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:-**

i) அ.சா.1 இவ்வழக்கின் நிகர்நிலைபுகார்தாரர் ஆவார். அசா.1 தனது சாட்சியத்தில் சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு முதுகுளத்தூர் அரசு கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் மதியம் 01.00 மணியளவில் 10 நபர்கள் வரையில் சேர்ந்து வகுப்பிற்கு வந்து முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா நடத்த வேண்டும் என்று கூறி மாணவர்களிடம் அதற்காக பணம் கேட்டதாகவும், அசா.1 அவர்களிடம் தன்னால் தரமுடியாது என்று கூறியதாகவும், அதில் தனக்கும், அந்த 10 நபர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அவர்களில் ஒரு நபர் கூட்டத்திற்குள் இருந்து அசா.1ன் கன்னத்தில் அடித்துவிட்டதாகவும், அந்த நபர் யார் என்பதை தன்னால் சரியாக பார்க்க முடியவில்லை என்றும், தனக்கு ஆதரவாக மற்ற மாணவர்களும் அங்கு கூடியிருந்ததால் அசா.1 அந்த 10 நபர்களையும் சரியாக கவனிக்கவில்லை என்றும், ஆனால் இவ்வழக்கின் எதிரிகள் அந்த கூட்டத்திற்குள் இல்லை என்றும், பின்னர் மற்ற மாணவர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டதாகவும், இது சம்மந்தமாக முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் சொன்னபோது போலிசார் தன்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் **(அ.சா.ஆ.1)** பெற்றுக்கொண்டதாகவும், அந்த புகாரில் என்ன சங்கதிகள் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அசா.2 மற்றும் அசா.3 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். அசா.4 தனது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் போலிசாரிடம் எதுவும் கையொப்பம் செய்து தரவில்லை என்றும், பார்வை



THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.04.02 17:06:21 +0530

மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் ஒன்று கூட தன்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii) எனவே, மேற்படி நால்வரும் பிறழ்சாட்சிகளாக அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதிலும் அவர்களின் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், புகார் மனுவானது நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

iv) அசா.5 முதுகுளத்தூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஆவார். இவரது சாட்சியத்தின்படி இவ்வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.இளஞ்செழியன் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியாலும், அவர் தன்னுடன் காவல்நிலையத்தில் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 11.11.2024 ம் தேதி 16.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.இளஞ்செழியன் முதுகுளத்தூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை **(அ.சா.ஆ.2)** பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.390/2021 பிரிவுகள் 294(b), 323 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.3)** பதிவு செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

v) மேலும், சார்பு ஆய்வாளர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோவிந்தன் மற்றும் முருகேசன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.5)** வரைந்து பார்வை மகஜர்


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.04.02 17:06:25 +0530

**(அ.சா.ஆ.4)** தயார் செய்தும், பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும், 2ம் எதிரியை 13.11.2021ம் தேதி 13.00 மணிக்கு காக்கூர் TELC சர்ச் அருகே வைத்து கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளதாகவும், 1 மற்றும் 3ம் எதிரிகள் தொடர்ந்து தலைமறைவாக இருந்ததால் அவர்களை கைது செய்யவில்லை எனவும், வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 IPC கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, சார்பு ஆய்வாளர் இவ்வாறு சாட்சியம் அளித்துள்ளபோதிலும் இவரது சாட்சியத்திற்கு வலுசேர்க்கும் விதமாக வேறு எந்த சாட்சிகளும் அரசு தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, இவரது சாட்சியத்தை மட்டும் வைத்து வழக்கை முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7)** மேற்படி, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில் அசா.1 முதல் அசா.4 சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், வழக்கு புகார் மனு நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என்று நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b) மற்றும் 323ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.04.02 17:06:30 +0530

**8)** இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b) மற்றும் 323ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரிகளை பிரிவு 278(1) B.N.S.S Actன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார்கள். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

**9)** இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.04.02 17:06:37 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:**

1) அ.சா.1 – திரு.மதிவின் (புகார்தாரர்)

2) அ.சா.2 – திரு.சந்தோஷ்குமார் என்ற சந்தோஷ்

3) அ.சா.3 – திரு.ராஜவேல்

4) அ.சா.4 – திரு.முருகேசன்

5) அ.சா.5 – திரு.முகில்அரசன் (சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுபொருள்:** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**குறிப்பு :-**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.04.02 17:06:49 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.